ஊர்தி நூல் நிலையங்கள்

* 251 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊர்தி நூல் நிலையங்கள் (Mobile Libraries) நமது ராஜ்யத்தில் எத்தனை உள்ளன, மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் 10 ஊர்தி நூல் நிலையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 9 கோயம்பத்தூர் மாவட்டத்திலும், ஒன்று மதுரை மாவட்டத்திலும் உள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஊர்தி நூல் நிலையங்கள் இல்லாத மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஊர்தி நூல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான உத்தேசம் அரசினருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது. கோயமுத்தூரில் இருக்கும் நூலகக் குழு மிகவும் முயற்சி செய்து ஒன்பது இயங்கும் நூலகங்களை அங்கே அமைத்திருக்கிறார்கள். மதுரையில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் இரண்டு வான்கள், பள்ளிக்கூடங்களுக்குச் சென்று புத்தகங்களைக் கொடுக்கும் அளவிற்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூருக்கு ஒரு வான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் வேலை இனிமேல்தான் தொடங்கும். எல்லா நூலகக் குழுத் தலைவர்களையும் அழைத்து, எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூலகங்களை வைக்க வேண்டும் என்ற முறையில் அரசு வற்புறுத்துவதாக இருக்கிறது.

Institute of Mathematical Sciences

* 252 Q.—THIRU A.M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether the State Government gives any grant to the Institute of Mathematical Research at Guindy; and

(*b*) if so, the amount of the grant per annum?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) சென்னை, அடையாற்றில் கணித விஞ்ஞான நிறுவனம் இருந்து வருகிறது.

(இ) 1962-63-லிருந்து 1966-67-வரை கணித விஞ்ஞான நிறுவனத்திற்குப் பின் வரும் மானியங்களை அரசு வழங்கியுள்ளது.

ஆண்டு.	தொகை. ரூ.
1962–63	2,45,000
1963–64	2,27,900
1964–65	2,99,342
1965–66	3,08,662
1966–67	3,56,383

1967 ஜூலை 11]

திரு. ஏ. எம். ராஜா : இதுவரை இந்தக் கணக்கு இயல் ஆராய்ச்சி நிலையம் செய்த சாதனைகள் என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானதொரு கணித ஆராய்ச்சி நிலையமாக இருந்து வருகிறது. இதன் மூலம் கண்டுபிடிக்கப்படுகிற பல நிலைமைகள் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு மிகவும் பயன்படுவனவாக இருக்கின்றன. கணித ஆராய்ச்சி நிலையம் டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் மட்டும்தான் இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சென்னையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிலையங்கள்தான் ஆசியாவிலேயே சிறந்த நிலையங்கள் என்று கூறப்படும் அளவிற்கு இருக்கின்றன. சென்னையில் அமைந்துள்ள இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளைப்பற்றி பரிசீலனை செய்து அறிக்கை தயாரிக்கும்படியாக, டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் பணி புரிந்து வருகிற ப்ரொஃபெஸர் எம்.ஜி.கே. மேனன் அவர்களை இந்த அரசு கேட்டுக்கொண்டு அவர்களும் பரிசீலனை செய்து இதனால் உருவான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் நல்ல பல முடிவுகள் வந்திருக்கின்றன என்றும், இந்த நிலையம் எடுத்த முடிவுகளை உலகத்திலேயிருக்கும் வேறு பல நாடுகளில் உள்ள நிலையங்கள்கூட ஏற்று பாராட்டுரை தெரிவித்திருக்கின்றன என்றும், இந்த நிலையத்தினுடைய முயற்சிகள் மேலும் பயன்படும் என்றும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்டிருக்கிற அறிக்கையிலுள்ளவற்றைக் குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கணித இயல் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் படிக்கிறார்கள்? அவர்களுக்குப் பட்டம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தில் பட்டம் வழங்கப்படுவதில்லை. ஆனால், டாக்டர் பட்டம் போன்றவற்றைப் பெறுவதற்காகப் பயிற்றுவிக்கின்ற அத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன. இதிலே படித்தவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இப்பொழுது எத்தனை பேர் அங்கே பயிற்சி பெறுகிறார்கள் என்பதற்கான குறிப்பு இல்லை.

Manufactue of diesel Engines.

*253 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a 5 crore project at Ennore near Madras for the manufacture of diesel engines for the high speed fishing boats is to be taken up for implementation soon; and

(*b*) if so, what is the contribution of the Central Government for this project?